மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவரைப் பற்றிக் குறிப்பிட்டதை, அந்த வார்த்தைகளை, மாண்புமிகு தங்கமணி அவர்கள் கூறிய பகுதிகளிலிருந்து அந்தப் பகுதிகள் மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திருமதி. ஜோதி வெங்கடாசலம்.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM: Sir, I move—

திரு. என். கே. பழனிசாமி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்

THIRUMATHI JOTHI VENCATACHELLUM: Sir, I have already been permitted to move any adjournment motion and the hon. Member should not disturb me . . .

(திரு. என். கே. பழனிசாமி அவர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். அவர்கள் பேசி முடியட்டும்.

5. ஒத்திவைப்புத் தீர்மானம்.

பேட்டவாய்த்தலை சர்க்கரை ஆலைமுன் கரும்பு உற்பத்தியாளர் உண்ணாநோன்பு இருப்பது குறித்து

THIRUMATHI JOTHI VENCATACHELLUM: Mr. Speaker, Sir, I have given notice under rule 42 of the Assembly Rules, that the business of the House do stand adjourned to discuss a definite matter of urgent public importance, viz.,

'That the fast by Sugarcane growers of Tiruchirappalli district before Pettaivaithalai Sugar Mills to press their demand'.

தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கரும்பு உற்பத்தியாளர்கள் அவர்களுக்கு கரும்புக்கு டன் ஒன்றுக்கு கிடைக்கிற விலை குறைவாக இருக்கிறது என குளித்தலை விவசாயிகள் சங்கம் ஒரு அறிக்கை விட்டிருந்தார்கள். உத்தர பிரதேச மாநிலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது அங்கு கரும்புக்கு டன் ஒன்றுக்கு கிடைக்கிற விலை 130 ரூபாய் ஆக இருக்கிறது, கர்நாடக மாநிலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறநேரத்தில் அங்கு விலை டன்

1973 டிசம்பர் 1] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

ஒன்றுக்கு ரூ. 120 கொடுக்கப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டில் கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்குக் கிடைக்கக் கூடிய விலை டன் ஒன்றுக்கு ரூ. 90 தான் கிடைக்கிறது. அது குறித்து நவம்பர் 21, 22, 23-ம் தேதிகளில் தொடர்ந்து மூன்று நாட்கள் என் தொகுதியைச் சேர்ந்த பெட்டவாய்த்தலையில் இருக்கக்கூடிய சர்க்கரை ஆலைக்கு முன்பு கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகள் ஒரு உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். இவர்களுக்கு நியாயம் கிடைக்கக்கூடிய முறையில் தமிழக அரசாங்கம் கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு இந்த விலையை உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்துகிற காரணத்தாலும்—இன்று வெளிச்சந்தையில் பொதுமக்களுக்கு விற்கப்படுகிற விலையைப்பார்க்கும் போது சர்க்கரை கிலோ ஒன்றுக்கு ரூ. 3-85 என்று விற்கப்படுகிறது—இது பொதுமக்களையும் பாதிக்கிறது, கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளையும் பாதிக்கக்கூடிய காரணத்தினால் இது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்ததொரு விஷயமாகும். ஆகவே, இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்தது 23-ம் தேதி. 23-ம் தேதி கொடுக்கப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானம் அமைச்சர் அவர்கள் இல்லாததால் இன்று வருகிறது. இன்று ஒன்று நீங்கள் இதே சப்ஜக்டில் கொடுத்திருக்கிறீர்கள். ஏற்கனவே ஒரு தீர்மானம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இது எடுக்கப்படவில்லை என்று திரு. பழனிச்சாமி அவர்களுக்குத் தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. இதை வைத்து ஒவ்வொரு முறையும் விதி 41-ன் கீழ் கொடுப்பது, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுப்பது என்றால் ஒரே தீர்மானத்தைப் பற்றி பலர் பேசுவது முறையல்ல. ஆகவே பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவும் இல்லை.

The Hon. Thiru Si. Pa. ADITANAR : Sir, the token fast before the Pattaivaithalai Sugar Mills has been given up. The cane growers of Poyyamani Village are now supplying sugarcane to the factory. The Mill is paying the price notified by the Government of India, namely, Rs. 80 per tonne and crushing is going on normally. For the sugar years 1971–72 and 1972–73

(Sugar year is from October to September) tripartite meetings of the representatives of the sugar mills, cane growers and the State Government were held and the mill owners were persuaded to pay a price higher than what the Government of India notified under the Sugarcane Control Order. For the year 1973–74, a similar tripartite meeting will be convened shortly for the same purpose. As the situation in the particular Mill mentioned by the hon. Member is now normal, I submit to the Hon. Speaker that there is no need to adjourn the business of the House.

திரு. என். கே. பழனிசாமி: ஒரு க்ளாரிபிகேஷன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானத்தில் க்ளாரிபிகேஷன் கிடையாது.

(திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் எழுந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கால் அட்டென்ஷன் நோட்டீசில்தான் கேள்வி கேட்கலாம்.

ஒத்திவைப்புத் தீர்மானத்திலே கிளாரிபிகேஷன் கிடையாது. அது முறையே இல்லை. கால் அட்டன்ஷன் நோட்டீசிலே தான் அப்படி கேட்கலாம்.

மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்கு பிறகு இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(6) அரசினர் தீர்மானம்.

விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே,

"சட்டப் பேரவை 41-வது விதி, பிரிவு (3)-ன்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களை கொண்டு வரக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்."
என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.